## க.பொ.த (சாத.தர)ப் பரீட்சை - 2019
## 60 - வணிகக்கல்வியும் கணக்கீடும்

| | | | | |
|---|---|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 1 x 40 | = | 40 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

வினா இலக்கம் 01 கட்டாயமானது = 20 புள்ளிகள்

### பகுதி I வணிகக்கல்வி

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 2 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 3 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 4 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 08 புள்ளிகள்) = 16 புள்ளிகள்

### பகுதி II கணக்கீடு

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 5 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 6 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 7 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 12 புள்ளிகள்) = 24 புள்ளிகள்

மொத்தம் = 60 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| **வினாப்பத்திரம் I** | - | **40 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் II** | - | **60 புள்ளிகள்** |
| **இறுதிப்புள்ளிகள்** | - | **100** |

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................... ✓ $\frac{4}{5}$
...............................................................................
...............................................................................

(ii) ............................................................................... ✓ $\frac{3}{5}$
...............................................................................
...............................................................................

(iii) ............................................................................... ✓ $\frac{3}{5}$
...............................................................................
...............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "**Total Marks**" எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**

# 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
## புள்ளி வழங்கும் விதம்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | = | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | | |
| 1ம் வினா | = | 20 புள்ளிகள் |
| பகுதி I - 2 x 08 | = | 16 புள்ளிகள் |
| பகுதி II 2 x12 | = | 24 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | = | 100 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

1ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02
V புள்ளிகள் - 02
VI புள்ளிகள் - 02
VII புள்ளிகள் - 02
VIII புள்ளிகள் - 02
IX புள்ளிகள் - 02
X புள்ளிகள் - 02 மொத்தப் புள்ளிகள் 20

பகுதி – I

2ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 08

3ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02 மொத்தப் புள்ளிகள் 8

4ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 02

IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**

## பகுதி II
## கணக்கீடு

5ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 04

IV புள்ளிகள் - 04 மொத்தப் புள்ளிகள் 12

6ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 04

III புள்ளிகள் - 02

IV புள்ளிகள் - 04 மொத்தப் புள்ளிகள் 12

7ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 08

மொத்தப் புள்ளிகள் 12

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය **I, II**
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
Business and Accounting Studies **I, II**

**12. 12. 2019 / 0830 - 1140**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

---

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு **1** தொடக்கம் **4** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பண்ணையொன்றில் வேலை செய்துகொண்டிருக்கையில் ஏற்பட்ட தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காகப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற 'மிஹிரி சிற்றுண்டிச்சாலை' இற்குச் சென்ற கமலா பழக்கோப்பை ஒன்றையும் விமலா பால் கோப்பை ஒன்றையும் வாங்கினர்.

**1.** 'மிஹிரி சிற்றுண்டிச்சாலை' இனாற் பூர்த்திசெய்யப்படுகின்ற மனிதத் தேவை எது ?
(1) உணவு (2) தொடர்பாடல் (3) வீடு (4) கல்வி

**2.** 'மிஹிரி சிற்றுண்டிச்சாலை' என்பது எவ்வகை வணிக அமைப்பைச் சார்ந்தது ?
(1) தனியுடைமை (2) சங்கங்கள்
(3) கூட்டுறவுச் சங்கம் (4) அரச திணைக்களம்

**3.** மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி கமலாவினதும் விமலாவினதும்
(1) தேவைகள் ஒரே மாதிரியானவை. (2) விருப்பங்கள் ஒரே மாதிரியானவை.
(3) தேவைகள் வேறுபட்டவை. (4) விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை.

**4.** 'மிஹிரி சிற்றுண்டிச்சாலை' இனாற் பயன்படுத்தப்படும் பழங்கள் எத்தகைய உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும் ?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சியாண்மை

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு **5** தொடக்கம் **7** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தேங்காய்நார் சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்தின் உரிமையாளர்களான நிமலன், உதயா ஆகியோருக்கு 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த முயற்சியாளருக்கான விருது கிடைக்கப்பெற்றதோடு, அரசாங்கத்தினால் அவர்களுக்கும் ஊழியர் ஒருவருக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாவொன்றும் வழங்கப்பட்டது.

**5.** 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்தின் புறச்சூழற் காரணி யாது ?
(1) நிமலன் (2) உதயா (3) ஊழியர் (4) அரசாங்கம்

6. 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்திற்கு 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த முயற்சியாளருக்கான விருது கிடைக்கப்பெற்றமையானது, அவ்வணிகத்தின்
(1) பலமாகும். (2) பலவீனமாகும். (3) வாய்ப்பாகும். (4) அச்சுறுத்தலாகும்.

7. 'லக்சிகா உற்பத்திகள்' வணிகம் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்திற்கு சட்ட ஆளுமை உள்ளது.
(2) 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்தல் கட்டாயமானதல்ல.
(3) 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்துடன் தொடர்புடைய விதத்தில் நிமலன், உதயா ஆகியோரின் நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாததாகும்.
(4) 'லக்சிகா உற்பத்திகள்' வணிகத்தில் தேங்காய்நாருக்கான செலவு அவ்வணிகத்தின் நேரில் கிரயமாகும்.

8. எந்தவொரு வங்கிக் கணக்கையும் கொண்டிராத ரமணன், தனது மோட்டார் வாகனத்தின் எரிபொருள் பற்றுச்சீட்டுக்கான கொடுப்பனவை இலத்திரனியல் அட்டையொன்றின் மூலம் செலுத்தினார். அவரிடமுள்ள இலத்திரனியல் அட்டையானது
(1) வரவு அட்டையாகும். (2) கடன் அட்டையாகும்.
(3) SET அட்டையாகும். (4) PET அட்டையாகும்.

9. மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கை உடைய ரங்கன் என்பவர் கபிலனிற்கு ரூ. 8 000 இனைச் செலுத்துவதற்காகக் காசோலை ஒன்றை வழங்கினார்.

இங்கு, ......①...... ரங்கனும், ......②...... கபிலனும், ......③...... மக்கள் வங்கியும் ஆகும்.

மேற்குறித்த கூற்றில் ①, ②, ③ எனும் வெற்றிடங்களுக்குரிய சரியான பதங்களை ஒழுங்குமுறையில் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) கட்டளையிடுபவர், கட்டளைப் பெறுபவர், பணம் பெறுபவர்
(2) கட்டளைப் பெறுபவர், கட்டளையிடுபவர், பணம் பெறுபவர்
(3) கட்டளையிடுபவர், பணம் பெறுபவர், கட்டளைப் பெறுபவர்
(4) பணம் பெறுபவர், கட்டளையிடுபவர், கட்டளைப் பெறுபவர்

10. ஆடைத் தொழிற்சாலையொன்றை நடாத்திவரும் வந்தனா தனது காப்புறுதி ஒப்பந்தமொன்றைப் பிணையாக வைத்து வீட்டைக் கட்டுவதற்காகக் கடனொன்றைப் பெற்றார். வந்தனா கடனைப் பெறப் பயன்படுத்தியது,
(1) தீக் காப்புறுதி ஒப்பந்தமாகும். (2) வழிப்பணக் காப்புறுதி ஒப்பந்தமாகும்.
(3) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தமாகும். (4) மோட்டார் வாகனக் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

11. உள்ளக, வாய்மொழி மூல, இலத்திரனியல் தொடர்பாடல் முறையினைக் குறிப்பிடும் சந்தர்ப்பத்தைத் தெரிவுசெய்க.
(1) காலைக் கூட்டத்தின்போது பாடசாலை அதிபர் ஒலிப்பெருக்கியினைப் பாவித்து உரையாற்றுதல்
(2) உற்பத்தி முகாமையாளர் தொலைபேசியூடாக வழங்குநர்களிடம் மூலப்பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளையிடல்
(3) பெற்றோர் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பெற்றோருக்கு வகுப்பாசிரியர் கடிதம் அனுப்புதல்
(4) விற்பனை முகாமையாளர் மின்னஞ்சல் மூலம் புதிய விலைப்பட்டியல்களை தமது வாடிக்கையாளர்களுக்கு அனுப்புதல்

12. போக்குவரத்தின் அடிப்படைக் கூறான போக்குவரத்து ஊடகத்துக்கான உதாரணம் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தென்பகுதி கடலை அண்டிய புகையிரதப் பாதையை பெலியத்தை வரை விரிவாக்குதல்
(2) அம்பாந்தோட்டை வரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை விரிவாக்குதல்
(3) கொட்டாவை பல்நிலைப் போக்குவரத்து மையத்தினை திறந்து வைத்தல்
(4) பொலன்னறுவை வரை அதிசொகுசுப் புகையிரதமொன்றைப் பணியில் ஈடுபடுத்தல்

13. சில்லறை வியாபாரமொன்றினைக் குறிப்பிடும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சிற்றுண்டிச்சாலையொன்றிற்கு 2 kg கேக்கினைக் கொள்வனவு செய்தல்
(2) பத்திக் உற்பத்தியாளர்கள் லக்சலவிற்கு சுவர் அலங்காரம் ஒன்றை விற்பனை செய்தல்
(3) பலம் விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்த உணவுப் பந்தலிற்காக 200 kg அரிசியினை விற்பனை செய்தல்
(4) மொரட்டுவ தளபாட வணிகர்கள் தளபாட கடையொன்றிற்கு அலுமாரி ஒன்றினை விற்பனை செய்தல்

14. அதிபர், மாணவ தலைவர்களை நியமித்து அவர்களுக்குப் பாடசாலையை மேற்பார்வை செய்யும் பணிகளை வழங்கினார். இது எத்தகைய முகாமைத்துவக் கருமமாகும் ?
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல்
(3) நெறிப்படுத்தல் (4) கட்டுப்படுத்தல்

**15.** பின்வரும் முதலீடுகள் ரூபனிடம் உள்ளன.

A - மக்கள் வங்கியில் ரூ. 25 000 பெறுமதியான நிலையான வைப்பு
B - பங்குச்சந்தையில் ரூ. 100 000 பெறுமதியான முதலீடு
C - திறைசேரி உண்டியல்களில் ரூ. 200 000 முதலீடு

மேற்குறித்த முதலீடுகளை நட்ட இடர் அதிகமுள்ள முதலீடு முதல் நட்ட இடர் குறைவாகவுள்ள முதலீடு வரை வரிசைப்படுத்தின் விடையானது

(1) B, A, C (2) B, C, A (3) C, A, B (4) C, B, A

**16.** முதலீடுகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) முதலீட்டின் நட்ட இடர் அதிகரிக்கும்போது அதன் அனுகூலங்கள் குறைவடையும்.
(2) பங்குச்சந்தை முதலீட்டினால் உயர் வட்டி வருமானத்தினை ஈட்ட முடியும்.
(3) வணிகமொன்றினைத் தொடங்கி நடாத்திவருதலை ஒரு முதலீட்டு முறையாகக் கருதமுடியாது.
(4) பொருளாதார நலனொன்றை எதிர்பார்த்து பணத்தொகையொன்றை வினைத்திறனான வழியொன்றில் ஈடுபடுத்துவது முதலீடாகும்.

**17.** வணிகத்தின் சொத்துக் கணக்குகளில் **மாத்திரம்** பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவுசெய்க.

(1) கடன்கொடுநரான தனுசனுக்கு ரூ. 5 000 இனைச் செலுத்துதல்
(2) உரிமையாளர் தனது சொந்தப் பணமான ரூ. 50 000 இனை வணிகத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுதல்
(3) ரூ. 100 000 இற்குக் காரியாலயத்திற்கான கணனியொன்றை உடன் காசுக்குக் கொள்வனவு செய்தல்
(4) மீள் விற்பனைக்காக ரூ. 12 000 இற்குரிய பொருள்களை கடனுக்குக் கொள்வனவு செய்தல்

**18.** வணிகத்தின் உரிமையாண்மையில் தாக்கம் செலுத்தும் கொடுக்கல் வாங்கல் எது ?

(1) கடன்படுநரான துசிதனிடமிருந்து ரூ. 7 500 பெறப்படுதல்
(2) கடன்கொடுநரான விமலிற்கு ரூ. 25 000 இனைக் காசோலை மூலம் செலுத்துதல்
(3) வணிகத்திற்காக ரூ. 50 000 வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொள்ளல்
(4) கிரயம் ரூ. 8 000 ஆன சரக்கை ரூ. 9 000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்தல்

**19.** வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | ரூ. |
|---|---|---|
| சாலிகா கணக்கு | வரவு | 5 000 |
| காசுக் கணக்கு | செலவு | 4 800 |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | 200 |

இக்கொடுக்கல் வாங்கலில் ரூ. 200 கழிவாகக் குறைக்கப்பட்டிருப்பது,

(1) ரூ. 5 000 இற்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போதாகும்.
(2) ரூ. 5 000 கடன்கொடுநருக்குப் பணம் செலுத்தும்போதாகும்.
(3) ரூ. 5 000 பொருள்களை உடன் காசுக்கு விற்பனை செய்யும்போதாகும்.
(4) ரூ. 5 000 கடன்படுநரிடமிருந்து காசு பெறப்படும்போதாகும்.

**20.** ஷிரானின் வணிகத்தில் 01.11.2019 இல் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு காணப்பட்டது.

| சொத்துகள் **(ரூ.)** | = | உரிமையாண்மை **(ரூ.)** | + | பொறுப்புகள் **(ரூ.)** |
|---|---|---|---|---|
| 25 000 | = | 15 000 | + | 10 000 |

02.11.2019 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலின் பின்னரான கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு அமைந்தது.

| சொத்துகள் **(ரூ.)** | = | உரிமையாண்மை **(ரூ.)** | + | பொறுப்புகள் **(ரூ.)** |
|---|---|---|---|---|
| 21 000 | = | 14 000 | + | 7 000 |

02.11.2019 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் யாது ?

(1) ரூ. 1 000 கழிவுக்கு உட்பட்டு கடன்கொடுநருக்கு ரூ. 4 000 செலுத்துதல்
(2) ரூ. 1 000 கழிவுக்கு உட்பட்டு கடன்படுநரிடமிருந்து ரூ. 4 000 பெறப்படுதல்
(3) ரூ. 1 000 வட்டியுடன் ரூ. 4 000 வங்கிக் கடன் தவணையைச் செலுத்துதல்
(4) ரூ. 4 000 கடனுக்குப் பெறப்பட்ட பொருள்களை ஷிரான் தனது சொந்தத் தேவைக்காக எடுத்தல்

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **21, 22** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பின்வரும் அட்டவணையில் வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சிலவும் மூல ஆவணங்கள் சிலவும் தரப்பட்டுள்ளன.

| கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் |
|---|---|
| 1. கபிலனிற்கான கடன் விற்பனை ரூ. 40 000 | A - பற்றுச்சீட்டு |
| 2. கடன் கொள்வனவு ரூ. 10 000 | B - நாட்குறிப்புக் கைச்சாத்து |
| 3. பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ. 5 000 | C - கொள்வனவுப் பட்டியல் |
| 4. வணிகப் பயன்பாட்டிற்காக கடனுக்கு வாங்கிய தளபாடம் ரூ. 50 000 | D - விற்பனைப் பட்டியல் |

**21.** மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஒழுங்குக்கேற்ப மூல ஆவணங்களைச் சரியான ஒழுங்குமுறையில் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) B, A, C, D (2) B, C, A, D (3) D, B, A, C (4) D, C, A, B

**22.** மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்ய வேண்டிய மூல ஏடுகளைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு, காசேடு, பொது நாளேடு

(2) கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, காசேடு, பொது நாளேடு

(3) கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, பொது நாளேடு, காசேடு

(4) விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசேடு

**23.** தீபாவின் வணிகத்தில் 01.09.2019 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த காசு மீதி ரூ. 250 ஆகும். அன்று ரூ. 4 750 முற்பணம் மீள் நிரப்பல் செய்யப்பட்டது. 2019 செப்டெம்பர் மாதத்திற்கான சில்லறைச் செலவீனங்களின் பெறுமதி ரூ. 4 200 ஆகும். 30.09.2019 இல் சில்லறைக் காசு மீதி, 01.10.2019 இல் மீள் நிரப்பப்பட வேண்டிய முற்பணத் தொகை ஆகியவற்றைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) ரூ. 250, ரூ. 4 750 (2) ரூ. 250, ரூ. 4 200

(3) ரூ. 800, ரூ. 4 200 (4) ரூ. 800, ரூ. 4 750

**24.** வங்கிக் கூற்று மீதி, வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டிற்கான காரணம் **அல்லாதது** எது ?

(1) வைப்பிலிட்டபோதிலும் வங்கியினால் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்படாத காசோலைகள்

(2) வங்கிக் கணக்கில் குறிப்பிடப்படாத வங்கியால் அறவிடப்பட்ட கட்டணம்

(3) மின்சாரக் கட்டணத்திற்காக வழங்கப்பட்ட காசோலைக்கு வங்கியினால் பணம் வழங்கப்பட்டிருத்தல்

(4) கடன்படுநரொருவர் நேரடியாக வங்கியில் காசோலையொன்றினை வைப்பிலிடல்

**25.** கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் விற்பனை நாளேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவுசெய்க.

(1) கைவினைப் பொருட்களை கடனுக்கு விற்பனை செய்தல் ரூ. 25 000

(2) கைவினைப் பொருட்களை காசுக்கு விற்பனை செய்தல் ரூ. 45 000

(3) கைவினைப் பொருள் உற்பத்தி இயந்திரத்தை ரூ. 65 000 கடனுக்கு விற்பனை செய்தல்

(4) கைவினை உற்பத்திக்காக கடனுக்குக் கொள்வனவு செய்த துணி இருப்பை ரூ. 55 000 காசுக்கு விற்பனை செய்தல்

**26.** சுமதி வணிகத்தில் ஜனவரி மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட விற்பனை நாளேடு பின்வருமாறு:

**விற்பனை நாளேடு**

| திகதி | பட்டியல் இல. | கொள்வனவாளர் | தொகை (ரூ.) | பே.ப. |
|---|---|---|---|---|
| 10/01 | 18 | குமாரி | 50 000 | |
| Ⓐ ........... | | Ⓑ ........... | 50 000 | |

மேலே தரப்பட்ட விற்பனை நாளேட்டில் Ⓐ , Ⓑ ஆகிய இடைவெளிகளுக்குரிய சொற்களைச் சரியான ஒழுங்கில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) 10/01, விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

(2) 10/01, குமாரியின் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

(3) 31/01, குமாரியின் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

(4) 31/01, விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

**27.** வணிகமொன்றில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது ஒரு கணக்கீட்டு வழுவின் தாக்கம் காரணமாக சமப்படவில்லையென்பதால் அந்த வேறுபாடான ரூ. 2 000 தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. இக்கணக்கீட்டு வழு யாது ?
(1) ரூ. 2 000 சம்பளக் கொடுப்பனவு சம்பளக் கணக்கில் பதியப்படாமையாகும்.
(2) செலுத்தப்பட்ட ரூ. 2 000 மின் கட்டணம் மின்சாரக் கட்டணக் கணக்கில் ரூ. 1 000 எனப் பதியப்பட்டமையாகும்.
(3) கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய ரூ. 4 000 கணக்குகளில் பதியப்படாமையாகும்.
(4) ரூ. 4 000 இற்கு வாங்கிய தளபாடங்கள், தளபாடக் கணக்கில் ரூ. 6 000 எனப் பதியப்பட்டுள்ளமையாகும்.

**28.** கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூ. 20 000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது. இதனால் வணிகத்தில்,
(1) வங்கிக் கணக்கு மீதி அதிகரிப்பதோடு கடன்கொடுநர் கணக்கு மீதியும் அதிகரிக்கும்.
(2) வங்கிக் கணக்கு மீதி அதிகரித்து கடன்கொடுநர் கணக்கு மீதி குறையும்.
(3) வங்கிக் கணக்கு மீதி குறைந்து கடன்கொடுநர் கணக்கு மீதி அதிகரிக்கும்.
(4) வங்கிக் கணக்கு மீதி குறைவதோடு கடன்கொடுநர் கணக்கு மீதியும் குறையும்.

**29.** 31.10.2019 அன்று சலித ரூ. 20 000 பெறுமதியான இயந்திரத்தைக் கடனுக்குக் கொள்வனவு செய்து, ரூ. 8 000 பெறுமதியான பண்டங்களை உடன் காசுக்கு விற்பனை செய்து, ரூ. 3 100 இனை சில்லறைக் காசாளருக்கு மீள் நிரப்பினார்.
மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின்போது பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்களைச் சரியான ஒழுங்குவரிசையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) நாட்குறிப்புக் கைச்சாத்து, பற்றுச்சீட்டு, சில்லறைக் காசேட்டுக் கைச்சாத்து
(2) நாட்குறிப்புக் கைச்சாத்து, பற்றுச்சீட்டு, செலவுத்தாள்
(3) செலவுத்தாள், பற்றுச்சீட்டு, சில்லறைக் காசேட்டுக் கைச்சாத்து
(4) நாட்குறிப்புக் கைச்சாத்து, செலவுத்தாள், சில்லறைக் காசேட்டுக் கைச்சாத்து

**30.** லக்ஷான் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவக் கட்டணம் தொடர்பான சில தகவல்கள் பின்வருமாறு:

- அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 500 ஆகும்.
- 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்காகப் பெறப்பட்ட மொத்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 000 ஆகும்.
- நான்கு அங்கத்தவர்கள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தினைச் செலுத்தியிருக்கவில்லை.

லக்ஷான் விளையாட்டுக் கழகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்துவக் கட்டணம்
(1) ரூ. 2 000 ஆகும். (2) ரூ. 48 000 ஆகும்.
(3) ரூ. 50 000 ஆகும். (4) ரூ. 52 000 ஆகும்.

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **31, 32** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

தயாளன் தேங்காய் டொபிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகத்தினை வாடகைக்குப் பெற்ற கட்டடமொன்றில் நடாத்தி வருகின்றார். அவர் ஒரு நாளைக்கு 1000 தேங்காய் டொபிகளை உற்பத்தி செய்வதோடு, அதற்கான செலவு பின்வருமாறாகும்.

| | ரூ. |
|---|---|
| தேங்காய், சீனி மற்றும் ஏனைய பொருள்கள் | 7 000 |
| டொபி தயாரிப்பவருக்கான நாட்கூலி ............... | 2 500 |
| நாளொன்றுக்கான கட்டடக் கூலி .................... | 300 |
| நாளொன்றுக்கான எரிவாயு மற்றும் மின்சாரச் செலவு | 200 |

**31.** டொபி தயாரிப்பவருக்கான நாட்கூலி இவ்வணிகத்தின்
(1) நேரில் கூலி கிரயமாகும். (2) ஏனைய நேர்க் கிரயமாகும்.
(3) முதன்மைக் கிரயமாகும். (4) உற்பத்தி மேந்தலைக் கிரயமாகும்.

**32.** ஒரு தேங்காய் டொபி துண்டானது ரூ. 12 இற்கு விற்கப்படின், தயாளன் கிரயத்தின்மீது வைத்துள்ள இலாப எல்லையானது
(1) 2% ஆகும். (2) 5% ஆகும். (3) 10% ஆகும். (4) 20% ஆகும்.

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **33** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

※ 01.01.2018 இல் தொடங்கிய தனபாலன் வணிகத்தினால் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்காகத் தயாரித்த வருமானக் கூற்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வருமானங்கள்** | **(ரூ.)** | **செலவுகள்** | **(ரூ.)** |
|---|---|---|---|
| பெற்ற கழிவு | 1 200 | விற்பனைத் தரகு | 800 |
| விற்பனை | 160 000 | வாடகை | 12 000 |
| | | மின் கட்டணம் | 8 500 |
| | | வங்கிக் கடன் வட்டி | 1 500 |
| | | விநியோக வாகனப் பெறுமானத் தேய்வு | 6 000 |
| | | ஊழியர் சம்பளம் | 18 000 |

※ வருடத்திற்கான கொள்வனவுகள் ரூ. 100 000

※ 31.12.2018 இல் தனபாலன் வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் காணப்பட்ட மொத்தச் சொத்து, பொறுப்பு விபரங்கள் வருமாறு:

| **சொத்து** | **(ரூ.)** | **பொறுப்புகள்** | **(ரூ.)** |
|---|---|---|---|
| இருப்பு | 30 000 | கடன்கொடுத்தோர் | 40 000 |
| விநியோக வாகனம் (கிரயத்தில்) | 120 000 | வங்கிக் கடன் | 50 000 |
| கடன்பட்டோர் | 35 000 | செலுத்த வேண்டிய மின் கட்டணம் | 1 500 |
| காசு மீதி | 14 500 | | |

**33.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான மொத்த இலாபம்
(1) ரூ. 60 000 (2) ரூ. 70 000 (3) ரூ. 90 000 (4) ரூ. 160 000

**34.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமானக்கூற்றில் குறிப்பிடப்படும் விநியோகச் செலவொன்றையும் நிதிச் செலவொன்றையும் சரியான ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) விற்பனைத் தரகு, வாடகை
(2) வங்கிக் கடன் வட்டி, விற்பனைத் தரகு
(3) விற்பனைத் தரகு, வங்கிக் கடன் வட்டி
(4) வங்கிக் கடன் வட்டி, விநியோக வாகன பெறுமானத்தேய்வு

**35.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் மொத்த நிலைய நிருவாகச் செலவு
(1) ரூ. 20 500 (2) ரூ. 37 000 (3) ரூ. 38 500 (4) ரூ. 40 000

**36.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்தில் செலுத்தப்பட்ட மின் கட்டணம்
(1) ரூ. 1 500 (2) ரூ. 7 000 (3) ரூ. 8 500 (4) ரூ. 10 000

**37.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான தேறிய இலாபம்
(1) ரூ. 42 900 (2) ரூ. 44 400 (3) ரூ. 45 900 (4) ரூ. 46 800

**38.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துகள், நடைமுறை பொறுப்புகளின் பெறுமதிகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ரூ. 41 500, ரூ. 79 500 (2) ரூ. 79 500, ரூ. 41 500
(3) ரூ. 79 500, ரூ. 91 500 (4) ரூ. 199 500, ரூ. 91 500

**39.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் விநியோக வாகனத்தின் தேறிய பெறுமதி
(1) ரூ. 6 000 (2) ரூ. 114 000 (3) ரூ. 120 000 (4) ரூ. 126 000

**40.** தனபாலன் வணிகத்தின் 31.12.2018 இல் உள்ளவாறான உரிமையாண்மை
(1) ரூ. 102 200 (2) ரூ. 108 000 (3) ரூ. 193 500 (4) ரூ. 199 500

※※

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: **60** විෂයය / பாடம்: **வணிகக்கல்வியும் கணக்கீடும்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 4 | 31. | 3 |
| 02. | 3 | 12. | 4 | 22. | 1 | 32. | 4 |
| 03. | 1 | 13. | 3 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 1 | 35. | 3 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 4 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 2 | 29. | ✸ | 39. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 4 | 40. | ✸ |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

# வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

மிஹிரிதென்ன மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அதிபர், ரன்கம பகுதியிலிருந்து வரும் மாணவர்கள் அந்தப் பகுதியில் பேருந்துச் சேவை இல்லாத காரணத்தினால் பாடசாலைக்குத் தாமதமாகவே வருகை தருவதாகக் கூறினார். இதற்கான தீர்வாக அப்பாடசாலையின் பழைய மாணவர்களான அபிராம், ரூபன், நந்தனா ஆகிய மூவரும் இணைந்து ஒவ்வொருவரும் ரூ. 200 000 வீதமும் 6% வருடாந்த வட்டியில் ரூ. 400 000 வங்கிக் கடனொன்றையும் ஈடுபடுத்தி ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த சிறிய பேருந்து ஒன்றைக் கொள்வனவு செய்து 'அருணன் டுவர்ஸ்' என்ற பெயரில் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி வணிகமொன்றைத் தொடங்கினர். இந்தப் பேருந்து ரன்கம வழியிலான போக்குவரத்திற்கும் சுற்றுலாப் பயணங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

பின்வரும் தகவல்கள் 31.10.2019 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கமாகும்.

| | ரூ. |
|---|---|
| ● பேருந்துச் சேவைப் பெறுவனவுகள் | |
| பயணிகளிடமிருந்து ........ | 96 000 |
| சுற்றுலாப் பயணங்களின் மூலம் ........ | 45 000 |
| ● செலுத்தப்பட்டவை | |
| எரிபொருள் செலவு ........ | 38 000 |
| பேருந்தைப் பழுதுபார்த்தல் செலவு ........ | 9 000 |
| ஓட்டுனருக்கான சம்பளம் ........ | 35 000 |
| ஏனைய செலவுகள் ........ | 7 000 |

31.10.2019 இற்கு உரிய பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- பேருந்திற்கு வருடாந்தம் 12% நேர்க்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும்.
- பெறவேண்டிய சுற்றுலாப் பயண வருமானம் ரூ. 15 000 ஆகும்.
- வருடாந்தக் காப்புறுதிக் கட்டணமான ரூ. 12 000 உம் உதவியாளருக்கான மாதச் சம்பளம் ரூ. 15 000 உம் செலுத்தப்படவில்லை.

31.10.2019 இல் மூன்று உரிமையாளர்களும் புதிய பேருந்து ஒன்றினை வணிகத்துக்காகக் கொள்வனவு செய்யத் தீர்மானித்ததுடன் அது தொடர்பான தகவல்களை இணையத்தில் தேடினர். அதேதினம் ஊழியரொருவரையும் பணிக்கு அமர்த்தியிருந்தனர்.

(i) (அ) 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் மூலம் பூர்த்திசெய்யப்படும் மனிதத் தேவையைக் குறிப்பிட்டு, அதனை 'அருணன் டுவர்ஸ்' எவ்வாறு நிறைவேற்றி வைக்கின்றதென எடுத்துக்காட்டுக.

(ஆ) மிஹிரிதென்ன மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கமானது, உரிமை அடிப்படையில் எத்தகைய வணிக அமைப்பைச் சாரும் ?

(ii) 'அருணன் டுவர்ஸ்' என்ற வணிகப் பெயரைப் பதிவுசெய்ய வேண்டுமென நந்தனா தெரிவிக்கின்றார்.

(அ) நந்தனாவின் கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா ?

(ஆ) மேலே (ii) (அ) இல் குறிப்பிட்ட விடைக்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

(iii) வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, 'அருணன் டுவர்ஸ்' சம்பவத்தினைக் கருத்திற் கொண்டு அதற்கான உதாரணங்களைத் தருக. (விடையளிப்பதற்குக் கீழேயுள்ள அட்டவணை மாதிரியைப் பயன்படுத்துக.)

| அகச்சூழல் காரணிகள் | உதாரணம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(iv) (அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் ஊடகமொன்றையும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் முறையொன்றையும் எழுதுக.

(ஆ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் முகாமைத்துவக் கருமமான திட்டமிடலுக்குரிய நடவடிக்கை ஒன்றை எழுதுக.

(v) 01.10.2019 இல் உள்ளவாறு 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பெறுமதிகளுடன் எழுதுக.

(vi) (அ) 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தில் ஓட்டுனருக்கான சம்பளக் கொடுப்பனவுக்குரிய இரட்டைப்பதிவை எழுதுக.

(ஆ) 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தால் 31.10.2019 இல் முடிவடைந்த மாதத்திற்காகத் தயாரிக்கப்படுகின்ற வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய மொத்தச் சம்பளத்தின் பெறுமானம் எவ்வளவு ?

(vii) 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்காகப் பயன்படுத்தும் மூல ஏடுகள் **இரண்டினையும்** மூல ஆவணங்கள் **இரண்டினையும்** எழுதுக.

(viii) 31.10.2019 இல் 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் காசு மீதியைக் கணிப்பிடுக.

(ix) 31.10.2019 இல் முடிவடைந்த மாதத்தில் 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

(x) 31.10.2019 இல் உள்ளவாறு 'அருணன் டுவர்ஸ்' வணிகத்தின் மொத்த உரிமையாண்மை, மொத்தப் பொறுப்புகள் எவ்வளவு ?

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

1. i. அ. போக்குவரத்து (1/2 புள்ளி)
   - ரன்மக வழியின் ஊடாகப் பேரூந்தைப் பயன்படுத்துதல்.
   - சுற்றுலாவிற்கு பேரூந்தைப் பயன்படுத்துதல்.

(1/2 புள்ளி)

ஆ. – தனியார் துறை
   – சங்க வகை (01 புள்ளி)

ii. அ. இணங்குகின்றேன் / ஆம் (01 புள்ளி)

ஆ. உரிமையாளர்களின் பெயர்கள் அன்றி வேறு பெயரில் காணப்பட்டமையால் (01 புள்ளி)

iii.

| அகச் சூழல் காரணிகள் | உதாரணம் |
|---|---|
| 1. உரிமையாளர் | அபிராம், ரூபன், நந்தனா |
| 2. முகாமையாளர் | அபிராம், ரூபன், நந்தனா |
| 3. ஊழியர் | ஓட்டுனர், உதவியாளர், ஊழியர் |

**அகச் சூழல் ஒன்றுக்கு 1/2 புள்ளி வீதம் 2 × 1/2 = 01 புள்ளி**
**உதாரணம் ஒன்றுக்கு 1/2 புள்ளி வீதம் 2 × 1/2 = 01 புள்ளி**

(02 புள்ளிகள்)

iv. அ. **வாய்மொழி** - அதிபர் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியமை.

**இலத்திரனியல்** - இணையத்தினூடாகத் தகவல்களைத் தேடல்
(1/2 புள்ளி) (1/2 புள்ளி) (01 புள்ளி)

ஆ. புதிய பேரூந்து ஒன்றினை வணிகத்திற்காக கொள்வனவு செய்யத் தீர்மானித்தல். (01 புள்ளி)

v.

| சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| + 600000 | = | + 600000 | + | - |
| + 400000 | = | - | + | + 400000 |
| 1000000 | = | 600000 | + | 400000 |

அல்லது

| சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1000000 | = | 600000 | + | 400000 |

அல்லது

| சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| + 600000 (காசு) | = | + 600000 (மூலதனம்) | + | - |
| + 400000 (காசு) | = | - | + | + 400000 (வங்கிக் கடன்) |
| 1000000 | = | 600000 | + | 400000 |

(02 புள்ளிகள்)

**சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு ( 02 புள்ளிகள் )**
**மொத்த தொகை கூட்டாது விட்டால் ( 01 புள்ளி )**
**ஒரு கொடுக்கல் வாங்கல் சரியாயின் ( 1/2 புள்ளி )**

vi. அ. சம்பளக் கணக்கு வரவு 35000
காசு கணக்கு செலவு 35000 (01 புள்ளி)

ஆ. ரூபா 50000

அல்லது

| | |
|---|---|
| ஓட்டுனருக்கான சம்பளம் | 35000 |
| உதவியாளருக்கான சம்பளம் | 15000 |
| | 50000 |

(01 புள்ளி)

vii. **மூல ஏடுகள்**

- காசேடு
- பொதுநாட்குறிப்பேடு (1/2 × 2 = 01 புள்ளி)

**மூல ஆவணங்கள்**

- பற்றுச் சீட்டு
- கொடுப்பனவுக் கைச்சாத்து
- நாட்குறிப்பு கைச்சாத்து (1/2 × 2 = 01 புள்ளி)

viii.

**காசு கணக்கு**

| விபரம் | ரூபா | விபரம் | ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் (1/2) | 600 000 | பேரூந்து கொள்வனவு | 1000 000 (1/2) |
| வங்கிக் கடன் | 400 000 | எரிபொருள் | 38, 000 |
| வருமானம் – பயணிகளிடமிருந்து | 96,000 | பேரூந்து பழுது பார்த்தல் செலவு | 9,000 |
| சுற்றுலா மூலம் | 45,000 | ஓட்டுனருக்கான சம்பளம் | 35,000 |
| | | ஏனைய செலவு | 7,000 |
| | | 31.10. மீ / செ | 52,000 (1) |
| | 11,41,000 | | 11,41,000 |
| 1.11 மீ.கீ.கொ.வ | 52 000 | | |

**அல்லது**

**வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | | 600 000 | |
| வங்கிக் கடன் | | 400 000 | |
| வருமானம் – | பயணிகள் | 96,000 | (1/2) |
| | சுற்றுலா | 45,000 | 11,41,000 |

**செலவுகள்**

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 10 000 000 | |
| எரிபொருள் செலவு | 38 000 | |
| பேரூந்து பழுது பார்த்தல் செலவு | 9 000 | (1/2) |
| ஓட்டுனர் சம்பளம் | 35 000 | |
| ஏனைய செலவுகள் | 7 000 | 1, 089, 000 |
| | | 52,000 (1) |

(02 புள்ளிகள்)

ix. **வருமானம்**

| | | | | |
|---|---|---|---|---|
| வருமானம் – | பயணிகள் | 96,000 | } (1/2) | |
| | சுற்றுலா | 60,000 | | 156 000 |

**செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| எரிபொருள் செலவு | 38 000 | } (1/2) | |
| பேரூந்து பழுது பார்த்தல் செலவு | 9 000 | | |
| ஓட்டுனர் சம்பளம் | 35 000 | | |
| உதவியாளர் சம்பளம் | 15 000 | | |
| காப்புறுதி | 1 000 | } (1/2) | |
| ஏனைய செலவுகள் | 7 000 | | |
| பேரூந்து பெறுமானத் தேய்வு | 10 000 | | |
| வங்கிக் கடன் வட்டி | 2 000 | | 117 000 |
| தேறிய இலாபம் | | | 39,000 (1/2) |

(02 புள்ளிகள்)

x. மொத்த உரிமையாண்மை – ரூபா 639 000 (1)

**அல்லது**

| | | |
|---|---|---|
| மூலதனம் | ரூபா | 600 000 (1/2) |
| தேறிய இலாபம் | ரூபா (1/2) | 39 000 |
| | | 639 000 |

(01 புள்ளி)

மொத்தப் பொறுப்புக்கள் – ரூபா 418 000 (1)

**அல்லது**

| | | | |
|---|---|---|---|
| வங்கிக் கடன் | ரூபா | 400 000 | } (1/2) |
| அட்டுறு வங்கி வட்டி | ரூபா | 2 000 | |
| அட்டுறு உதவியாளர் சம்பளம் | ரூபா | 15 000 | } (1/2) |
| அட்டுறு காப்புறுதிக் கட்டணம் | ரூபா | 1 000 | |
| | | 418 000 | |

(01 புள்ளி)

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ. 01<br>ஆ. 01 | அ. 01<br>ஆ. 01 | 02 | அ. 01<br>ஆ. 01 | 02 | அ. 01<br>ஆ. 01 | 02 | 02 | 02 | 02 | 20/20 |

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) (அ) மனித விருப்பம் என்றால் என்ன ?

(ஆ) மனித விருப்பங்களின் **இரண்டு** குணாம்சங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) வணிகர்களுக்கு மனிதத் தேவைகளைத் தோற்றுவிக்க முடிவதுடன், மனித விருப்பங்களைத் தோற்றுவிக்க முடியாது.

(ஆ) உற்பத்திசார் வணிகத்தில் வழங்குநர்கள் அவ்வணிகத்தின் அகச்சூழல் காரணியாகக் கருதப்படுகின்றனர்.

(இ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்த எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ அதன் உரிமையாளராவர்.

(ஈ) வணிகங்கள் எப்பொழுதும் இலாப நோக்குடனேயே செயற்படும். (02 புள்ளிகள்)

(iii) கொக்கலவில் வசிக்கும் சுமனா, காந்தியுடைய உதவியுடன் தனது காணியில் கறுவாப் பயிரிட்டு 'தேசிய கறுவா தேநீர்' எனும் தனது உற்பத்தியை மடல்தூவ தீவைப் பார்வையிட வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் நகரிலுள்ள கடைகளுக்கும் உள்ளூர் நுகர்வோருக்கும் விற்பனை செய்யும் வணிகத்தை நடாத்தி வருகின்றார்.

(அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'தேசிய கறுவா தேநீர்' வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரான ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக.

(ஆ) நீர் மேலே (iii) (அ) இல் குறிப்பிட்ட அக்கறையுடைய ஒவ்வொரு தரப்பினரும் 'தேசிய கறுவா தேநீர்' வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணம் ஒன்று வீதம் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) வணிக பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. சக்தி பத்திக் உற்பத்தியாளர்கள்
2. சகுரா காளான்
3. நலம் வைத்தியசாலை
4. சந்திரன் சாரதிப் பாடசாலை

(அ) மேற்குறித்த ஒவ்வொரு வணிகத்தினாலும் நிறைவேற்றப்படும் மனிதத் தேவை யாது ?

(ஆ) மேற்குறித்த ஒவ்வொரு வணிகத்தினதும் உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் அது உரித்தாகும் வணிக அமைப்பு யாதெனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

2. i.

அ. மனித தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பல்வேறுபட்ட முறைகள் விருப்பங்கள் எனப்படும். (01 புள்ளி)

ஆ. - அத்தியாவசியமற்றது.
- பல்வகைப்பட்டவை.
- தோற்றுவிக்கக் கூடியதாகவிருத்தல்
- வரையறுக்கப்படாதவை
- பரவலாகக் காணப்படல் $(1/2 \times 2$ = 01 புள்ளி)

ii. அ. பொய்

ஆ. பொய்

இ. உண்மை

ஈ. பொய் $(1/2 \times 4$ = 02 புள்ளிகள்)

iii. அ. **ஊழியர்**

– காந்தி

**வாடிக்கையார்**

- மடல்தூவ தீவைப் பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகள்
- நகரிலுள்ள கடைகள்
- உள்ளூர் நுகர்வோர் (1/2 x 2 = 1 புள்ளி)

ஆ. **காந்தி**

- நியாயமான சம்பளத்தைப் பெற
- தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு

**வாடிக்கையாளர் / நகரிலுள்ள கடைகள் / உள்ளூர் நுகர்வோர்**

- தரமான கறுவா, தேநீர் பானங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கு

(1/2 x 2 = 1 புள்ளி)

iv. அ. 1 – உடை

2 – உணவு

3 – சுகாதாரம்

4 – கல்வி 2 : 1/2 புள்ளி

3 / 4 க்கு 01 புள்ளி

ஆ. 1 – பொருள் உற்பத்தி வணிகம்

2 – பொருள் உற்பத்தி வணிகம்

3 – சேவை உற்பத்தி வணிகம்

4 – சேவை உற்பத்தி வணிகம் 2/3 க்கு : 1/2 புள்ளி

4 க்கு 01 புள்ளி

Q2

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| அ. 01<br>ஆ. 01 | அ. 1/2<br>ஆ. 1/2<br>இ. 1/2<br>ஈ. 1/2 | அ. 01<br>ஆ. 01 | அ. 01<br>ஆ. 01 | $\frac{8}{8}$ |

**3.** (i) (அ) வணிக வங்கி என்றால் என்ன ?

(ஆ) தொடர்பாடல் முறையொன்றைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா**, **பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) சேமிப்பு வைப்புகளுடன் ஒப்பிடும்போது நிலையான வைப்புகளுக்கு உயர் அனுகூலம் கிடைக்கப்பெறும்.

(ஆ) உயர் நம்பிக்கை எனும் காப்புறுதித் தத்துவம் ஆதனக் காப்புறுதிக்கு மாத்திரமே பொருத்தமானதாகும்.

(இ) தொடர்பாடல் என்பது வெளிநபர்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையில் மாத்திரம் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதாகும்.

(ஈ) யாதாயினுமொரு நாடு அதன் உள்நாட்டு உற்பத்திகளை ஏனைய நாடொன்றிற்கோ, நாடுகளுக்கோ விற்பனை செய்தலானது ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். (02 புள்ளிகள்)

(iii) இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைப் பேணும் இலங்கை துறைமுக அதிகாரசபையானது சிறப்புக் குறுக்குக் கோடிட்ட ரூ. 200 000 பெறுமதியான காசோலையொன்றை மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கைப் பேணும் இலங்கை ரெலிகொம் PLC இற்கு வழங்கியது.

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை ரெலிகொம் PLC ஆகியவற்றினால் வழங்கப்படும் ஒவ்வொரு துணைச் சேவையைக் குறிப்பிடுக.

(ஆ) மேற்குறித்த சம்பவத்தின்படி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட காசோலையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கும் விதத்தை எடுத்துக்காட்டுக. (02 புள்ளிகள்)

(iv) விமலன் தனது தந்தைக்குச் சொந்தமான மோட்டார் வாகனத்தைச் செலுத்தியபோது விபத்துக்குள்ளானார். இதுபற்றி விமலன் தனது தொலைபேசி மூலம் காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தார். காப்புறுதி முகவர் வருகைதந்து மதிப்பிட்ட சேதத்திற்குரிய நட்டஈட்டுத் தொகையை விமலன் கோரியபோதிலும் காப்புறுதி முகவர் விமலனுக்கு அதனைச் செலுத்த மறுத்தார்.

(அ) விமலனுக்கு காப்புறுதி இழப்பீடு மறுக்கப்பட்டமைக்குக் காரணமான காப்புறுதித் தத்துவம் யாது?

(ஆ) மேற்குறித்த சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலத்திரனியல் தொடர்பாடல் செயன்முறையை இனங்கண்டு, அதில் அனுப்புபவர், செய்தி, ஊடகம், பெறுபவர், துலங்கல், மீள வலியுறுத்தல் ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

3. i.

அ. நடைமுறை கணக்கு மற்றும் ஏனைய வைப்புக் கணக்குகளையும் பேணி வணிக நடவடிக்கைகளுக்குரிய பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் வணிக வங்கி எனப்படும்.

(01 புள்ளி)

ஆ. – பொருத்தமான தன்மை

– விரைவு

– கிரயம்

– தெளிவான தன்மை

– பயன்படுத்துவதில் இலகு தன்மை

($1/2$ x $2$ = 1 புள்ளி)

ii. அ. உண்மை,

ஆ. பொய்

இ. பொய்


ஈ. உண்மை ($1/2$ x $4$ = 2 புள்ளி)

iii. அ. இலங்கை துறைமுக அதிகார சபை – போக்குவரத்துச் சேவை

இலங்கை ரெலிகொம் PLC – தொடர்பாடல் சேவை

(1/2 x 2 = 01 புள்ளி)

ஆ.




( 1 × 1 = 01 புள்ளி)

iv. அ. காப்புறுதி செய்யத்தக்க உரிமை (1/2 புள்ளி)

ஆ. அனுப்புபவர் – விமலன்

செய்தி – வாகனம் விபத்துக்குள்ளாகியமை

ஊடகம் – இலத்திரனியல் / வாய்மொழி / இலத்திரனியலும் வாய்மொழியும்

பெறுபவர் – காப்புறுதி நிறுவனம்

துலங்கல் – விபத்து நடைபெற்ற இடத்திற்கு வருவதாக அறிவித்தல் / தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

மீள வலியுறுத்தல் – விபத்து நடைபெற்ற இடத்திற்கு காப்புறுதி முகவர் வருகை தரல்.

2 விடயத்திற்கு 1/2 புள்ளி வீதம் 06 விடயத்திற்கும் (1 1/2 புள்ளி)

Q3

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| அ. 01<br>ஆ. 01 | அ. 1/2<br>ஆ. 1/2<br>இ. 1/2<br>ஈ. 1/2 | அ. 01<br>ஆ. 01 | அ. 1/2<br>ஆ. 1 1/2 | — |

**4.** (i) (அ) ‘சந்தைப்படுத்தல்’ என்றால் என்ன ?

(ஆ) சந்தைப்படுத்தல் கலவையில் உற்பத்திப்பொருள் எனும் மாறியில் அடங்கும் உருப்படிகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா**, **பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) அருமையல்லாத வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி வணிகத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயன்முறை முகாமைத்துவம் ஆகும்.

(ஆ) வணிகத்தின் சந்தைப்படுத்தல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் சந்தைப்படுத்தல் கலவையின் முக்கியமான மாறியாக இடம் கருதப்படும்.

(இ) இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது இலங்கை முதலீட்டு முறைமையில் இயங்கி வரும் முறைமைப்படுத்தும் நிறுவனமாகும்.

(ஈ) அரசின் நீண்டகால நிதித் தேவையினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அரசின் சார்பாக இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியல்கள் வெளியிடுகின்றது. (02 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் முகாமையாளரினால் உற்பத்திப்பொருளொன்றை அறிமுகப்படுத்தும்போது வெளிப்படுத்தப்பட்ட கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

“சூட்டினைத் தக்கவைக்கும், நீல நிற, புதிய உணவுக் கொள்கலனொன்றின் கிரயம் ரூ. 100 ஆகும். கிரயத்தில் 10% இலாப எல்லையுடன் விலையைத் தீர்மானிக்கவும், விற்பனை மேம்படுத்துவோரினால் நகரிலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் ஆரம்பக் கட்ட அறிமுகப்படுத்தலை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.”

(அ) மேற்குறித்த கூற்றில் உள்ளடங்கியுள்ள சந்தைப்படுத்தல் கலவை மாறிகளான உற்பத்திப்பொருள் விலை, இடம், மேம்படுத்தல் என்பவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக.

(ஆ) மேற்குறித்த கூற்றில் உள்ளடங்கியுள்ள திட்டமிடலுடன் தொடர்பான செயற்பாட்டிற்கான உதாரணமொன்றை எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) சியாமளாவுக்கு ரூ. 100 000 இற்கான சேமிப்பு வைப்பொன்றும், அமரனுக்கு ரூ. 80 000 இற்கான நிலையான வைப்பொன்றும், ருத்திரனுக்கு ரூ. 50 000 இற்கான பங்குச்சந்தை முதலீடும் உள்ளது.

(அ) மேற்குறித்த கூற்றில் குறிப்பிடப்பட்ட மூவரில் நட்ட இடர் கூடிய முதலீட்டினைச் செய்துள்ளவர் யார் ?

(ஆ) “சியாமளாவின் எதிர்பார்க்கப்படும் அனுகூல சதவீதம், ருத்திரனின் எதிர்பார்க்கப்படும் அனுகூல சதவீதத்தை விட அதிகமாகக் காணப்பட வேண்டும்.”
நீர் இக்கூற்றுடன் இணங்குகின்றீரா ? உமது விடைக்கான காரணமொன்றைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

4. i.

அ. மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காகப் பெறுமானங்களுடன் கூடிய உற்பத்திப் பொருள் ஒன்றை உற்பத்தி செய்து வழங்கும் செயன்முறையே சந்தைப்படுத்தல் எனப்படும். **அல்லது**
மனித தேவைகள் விரு.ப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக பண்டங்களை உற்பத்தி செய்தல், விலையிடுதல், விநியோகம் செய்தல், மேம்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் சந்தைப்படுத்தல் எனப்படும்.

(01 புள்ளி)

ஆ.
- தரம்
- பண்புகள்
- வடிவம்
- பொதி
- வியாபாரப் பெயர்
- அளவு
- பொறுப்பு
- சேவை

($1/2 \times 2 = 1$ புள்ளி)

ii. அ. பொய்

ஆ. பொய்

இ. உண்மை

ஈ. பொய் (1/2 x 4 = 2 புள்ளி)

iii. அ. **உற்பத்திப் பொருள்**

- சூட்டினைத் தக்க வைக்கும் நீல நிற உணவுக் கொள்கலன்

**விலை**

- கிரயம் ரூபா 100
- இலாப எல்லை 10%
- விற்பனை விலை ரூபா 110

**இடம்**

- நகரிலுள்ள பாடசாலைக்கு அருகில்

**மேம்படுத்தல்**

- விற்பனை மேம்படுத்துவோரினால்

(2 விடயத்திற்கு 1/2 வீதம் 4 இற்கு 01 புள்ளி)

ஆ. நகரிலுள்ள பாடசாலைகளுக்கு அருகில் ஆரம்பக் கட்ட அறிமுகப்படுத்தலை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. (01 புள்ளி)

iv. அ. ருத்திரன் (01 புள்ளி)

ஆ. இணங்கவில்லை / இல்லை

- பங்குச்சந்தையில் முதலிடுவது உயர் இடர் காரணமாக உயர் அனுகூலத்தை எதிர்பார்க்கின்றார்.

(1/2 × 2 = 01 புள்ளி)

| Q4 | (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|
| | அ. 01<br>ஆ. 01 | அ. 1/2<br>ஆ. 1/2<br>இ. 1/2<br>ஈ. 1/2 | அ. 01<br>ஆ. 01 | அ. 01<br>ஆ. 01 | $\frac{8}{8}$ |

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) (அ) வணிகமொன்றின் உரிமையாண்மை என்றால் என்ன ?

(ஆ) தனியுடைமை வணிகமொன்றில் உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவை எழுதுக.

(அ) கடன்படுநரான மாதவனிடமிருந்து ரூ. 7 000 இற்கான காசோலை பெறப்படல்

(ஆ) தளபாட விற்பனை நிலையமொன்றை நடாத்தும் நந்தன் ரூ. 35 000 பெறுமதியான சாப்பாட்டு மேசையொன்றைத் தனது சொந்தப் பயன்பாட்டுக்காக எடுத்துச் செல்லல் (02 புள்ளிகள்)

(iii) சஹ்ன் வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நான்கு, வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்திய விதம் பின்வருமாறு:

| திகதி | கொடுக்கல் வாங்கல் | சொத்துகள் (ரூ.) | = உரிமையாண்மை (ரூ.) | + பொறுப்புகள் (ரூ.) |
|---|---|---|---|---|
| 02.10.2019 | 1 | சரக்கிருப்பு +15 000 | | கடன்கொடுத்தோர் +15 000 |
| 03.10.2019 | 2 | தளபாடம் +25 000<br>காசு –25 000 | | |
| 04.10.2019 | 3 | சரக்கிருப்பு –10 000<br>கடன்பட்டோர் +12 000 | இலாபம் +2 000 | |
| 05.10.2019 | 4 | காசு –9 000 | பெற்ற கழிவு +1 000 | கடன்கொடுத்தோர் –10 000 |

மேலும் 01.10.2019 இல் சஹ்ன் வணிகத்தின் மொத்தச் சொத்துகள் ரூ. 250 000 உம் மொத்த பொறுப்புகள் ரூ. 50 000 உம் ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் கொடுக்கல் வாங்கல்களைப் பெறுமதிகளுடன் எழுதுதல்

(ஆ) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்த பின்னர் 05.10.2019 இல் உள்ளவாறு வணிகத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பெறுமதிகளுடன் காட்டுதல் (04 புள்ளிகள்)

(iv) ரூபன் டிரேடர்ஸ் இல் நவம்பர் மாதத்தில் பெறப்பட்ட சில்லறைக் காசு முற்பணம் ரூ. 1 000 ஆகும். 2019 நவம்பர் மாதத்திற்கான சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:

| திகதி | கை.இல. | விபரம் | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|
| 02.11.2019 | 01 | தபாற் கட்டணம் | 150 |
| 10.11.2019 | 02 | போக்குவரத்துச் செலவுகள் | 80 |
| 15.11.2019 | 03 | உபசரணைச் செலவுகள் | 200 |
| 29.11.2019 | 04 | முச்சக்கர வண்டிக் கட்டணம் | 200 |

**வேண்டப்படுவது:**

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக் காசேட்டில் பதிவுசெய்து, 30.11.2019 இற்கு சில்லறைக் காசேட்டை சமப்படுத்திக் காட்டுதல் (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

5.

i.

அ. – வணிகத்தின் உரிமையாளர் சார்பாகக் காணப்படும் சொத்துக்களின் அளவு உரிமையாண்மை எனப்படும்.

– மொத்த சொத்துக்களில் இருந்து மொத்தப் பொறுப்புக்களைக் கழிக்க வருவது உரிமையாண்மை ஆகும். (1 × 1 = 01 புள்ளி)

ஆ. – உரிமையாளர் மேலதிக மூலதனம் இடல்.

– உரிமையாளர் பற்று

– செலவீனங்கள்

– வருமானங்கள் (1/2 × 2 = 01 புள்ளி)

ii.

அ. காசு கணக்கு வரவு ரூபா 7000

கடன் படுனர் / மாதவன் கணக்கு செலவு ரூபா 7000 (01 புள்ளி)

ஆ. பற்று கணக்கு வரவு ரூபா 35000

கொள்வனவுக் கணக்கு செலவு ரூபா 35000 (01 புள்ளி)

iii.

அ. 1. கடனுக்கு சரக்கு கொள்வனவு ரூபா 15 000

2. ரூபா 25 000 காசிற்கு தளபாடக் கொள்வனவு

3. ரூபா 10 000 கிரயமான சரக்குகள் ரூபா 12 000 க்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
ரூபா 10 000 கிரயமான சரக்குகள் ரூபா 2000 இலாபத்துடன் கடனிற்கு விற்கப்பட்டது.

4. – கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 10 000 த்தில் காசாக ரூபா 9 000 செலுத்தப்பட்டது. பெற்ற கழிவு 1000

– ரூபா 10 000 பெறுமதியான கடன் கொடுத்தோருக்கு ரூபா 9 000 கொடுத்து கணக்குத் தீர்க்கப்பட்டது.

– 10% கழிவு பெற்று கடன்கொடுத்தோனுக்கு ரூபா 9 000 செலுத்தப்பட்டது.

(1/2 x 4 = 2 புள்ளி)

ஆ.

| சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 258000 | = | 203000 | + | 55000 |
| (1/2) | | (1) | | (1/2) |

(02 புள்ளிகள்)

அல்லது

| | சொத்துக்கள் | | = | உரிமையாண்மை | | + | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19.10.1 ல் மீதி | 250000 | (1/2) | = | 200000 | (1) | + | 50000 | (1/2) |
| | + 8000 | | = | + 3000 | | + | + 5000 | |
| 19.10.5 மீதி | 258000 | | = | 203000 | | + | 55000 | |

(02 புள்ளி)

iv.

**சில்லறைக் காசேடு**

| பெறுவனவு ரூபா | ப. சீ | திகதி | விபரம் | கை. இல. | மொத்தம் | அஞ்சல் செலவு | போ. செலவு | உ.ப. செலவு | பே. ப |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1/2) 1000 | | 1.11.19 | காசு | | | | | | |
| | | 2.11.19 | தபாற் கட்டணம் | (1/2) | 150 | 150 | | | |
| | | 10.11.19 | போக்குவரத்து செலவு | | 80 | | 80 | | |
| | | 15.11.19 | உபசரணை செலவு | | 200 | | | 200 | |
| | | 29.11.19 | முச்சக்கர வண்டி | | 200 | | 200 | | |
| | | | | | 650 | 150 | 280 | 200 | |
| | | 30.11.19 | மீதி/ கீ/ சென்றது | (1/2) | 370 | (1/2) | (1/2) | (1/2) | |
| 1000 | | | | | 1000 | | | | |
| 370 (1/2) | | 1.12.19 | மீதி/ கீ/ வந்தது | | | | | | |

அமைப்பிற்கு (1/2) புள்ளி (04 புள்ளிகள்)

| Q5 | (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|
| | அ. 01<br>ஆ. 01 | அ. 01<br>ஆ. 01 | அ. 02<br>ஆ. 02 | 04 | $\frac{12}{12}$ |

**6.** (i) (அ) 'பரீட்சை மீதி' என்றால் என்ன ?

(ஆ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படும் அடிப்படைக் கணக்கீட்டுக் கூறுகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) சிந்துஜன் வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சிலவும் அவற்றைப் புதிதாக வேலைக்கமர்த்திய எழுதுவினைஞர் கணக்குகளில் பதிவிட்ட விதமும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01.03.2019 | மேலதிகமாக மூலதனமிடல் | ரூ. 50 000 |
| 02.03.2019 | கடன் கொள்வனவு | ரூ. 45 000 |
| 03.03.2019 | மின்சாரக் கட்டணம் செலுத்தல் | ரூ. 8 000 |
| 04.03.2019 | தளபாடக் கொள்வனவு | ரூ. 12 000 |
| 05.03.2019 | உடன்காசுக்கு விற்பனை | ரூ. 30 000 |

**பேரேட்டுக் கணக்குகள்**

**காசு கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) | திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 01.03 | மூலதனக் கணக்கு | | 50 000 | 03.03 | மின்சாரக் கட்டணக் கணக்கு | | 8 000 |
| 05.03 | விற்பனைக் கணக்கு | | 30 000 | 04.03 | தளபாடக் கணக்கு | | 12 000 |

**மூலதனக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) | திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01.03 | காசுக் கணக்கு | | 50 000 |

**கொள்வனவுக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) | திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 04.03 | காசுக் கணக்கு | | 12 000 | | | | |

**மின்சாரக் கட்டணக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) | திகதி | விபரம் | பே.ப. | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 03.03 | காசுக் கணக்கு | | 8 000 |

**வேண்டப்படுவது:**

(அ) கணக்குகளில் பதிவிடும்போது ஏற்பட்ட **வழுக்கள்** யாவையெனப் பெறுமதிகளுடன் எடுத்துக்காட்டுக.

(ஆ) மேலே (ii) (அ) இல் குறிப்பிட்ட வழுக்களில் யாதாயினும் **இரண்டு** வழுக்களைச் செம்மையாக்கும் பேரேட்டுப் பதிவுகள் (04 புள்ளிகள்)

(iii) நிர்மலன் என்பவர் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் போத்தல்களை உபயோகித்து பூச்சாடிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார். 2019 மே மாதத்திற்கான தகவல்கள் பின்வருமாறாகும்:

| | ரூ. |
|---|---|
| பிளாஸ்டிக் போத்தல்கள் கொள்வனவு .......................... | 13 000 |
| பூச்சாடிகளைத் தயாரிப்பவருக்கான சம்பளம் ................ | 6 000 |
| பூச்சாடிகளுக்கு வர்ணப்பூச்சிடல் செலவு .................... | 2 500 |
| மின்சாரச் செலவு .......................................................... | 3 000 |
| பூச்சாடிகளைத் தயாரிக்கும் இயந்திரக் கொள்வனவு ..... | 60 000 |

மேலதிக தகவல்கள்:

- இயந்திரத்தை வருடாந்தம் 10% எளிய நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.
- சகல பொருள்களையும் உபயோகித்து மே மாதத்தில் 100 பூச்சாடிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**வேண்டப்படுவது:**

31.05.2019 இல் முடிவுற்ற மாதத்திற்கான உற்பத்திக் கிரய அட்டவணையைத் தயாரித்தல்
(02 புள்ளிகள்)

(iv) 31.03.2019 இல் முடிவுற்ற மாதத்தில் தில்லை வணிகத்திற்குக் கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 01.03.2019 ஆம் திகதி செலவு மீதி | ரூ. | 11 000 |
| **வைப்புகள்:** | | |
| 02/03 காசு | ரூ. | 20 000 |
| 05/03 காசோலை இல. 758011 | ரூ. | 22 000 |
| 15/03 நேரடி வைப்பு | ரூ. | 15 000 |
| **கழிக்கப்பட்டவை:** | | |
| 04/03 சம்பளம் - காசோலை இல. 352301 | ரூ. | 10 000 |
| 25/03 துசிதா - காசோலை இல. 352302 | ரூ. | 20 000 |
| 30/03 வங்கிக் கட்டணம் | ரூ. | 3 000 |

**வேண்டப்படுவது:**

(அ) 2019 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கூற்றைத் தயாரித்தல்

(ஆ) மேலே தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து வங்கிக் கணக்கைச் செம்மையாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் உருப்படி ஒன்றினைப் பெயரிடுதல் (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

6.

i.

அ. குறித்த கால இறுதியில் பேரேட்டுக் கணக்குகளின் வரவு மீதிகளையும் செலவு மீதிகளையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்படும் பட்டியல் ஆகும். (01 புள்ளி)

ஆ. – சொத்துக்கள்
- பொறுப்புக்கள்
- உரிமை

($1/2 \times 2$ = 1 புள்ளி)

ii.

அ. 1. கடன் கொள்வனவு ரூபா 45000 கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

2. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 8000 காசேட்டில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் மின்சாரக் கட்டண கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

**அல்லது**

மின்சாரக் கட்டணம் ரூபா 8000 மின்சாரக் கட்டணக் கணக்கில் செலவு பக்கத்தில் பதியப்பட்டது.

**அல்லது**

மின்சாரம் கட்டணம் செலுத்திய ரூபா 8000 காசேட்டிலும் மின்சாரக் கட்டணக் கணக்கிலும் செலவில் பதியப்பட்டது.

3. தளபாடக் கொள்வனவு ரூபா 12 000 காசேட்டில் சரியாகப் பதியப்பட்ட போதும் கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**அல்லது**

தளபாடக் கொள்வனவு ரூபா 12 000 கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

4. உடன் காசு விற்பனை ரூபா 30 000 காசேட்டில் சரியாகப் பதியப்பட்டது ஆனால் விற்பனைக் கணக்கில் பதியப்படவில்லை.

**அல்லது**

உடன் காசு விற்பனை ரூபா 30 000 காசு கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

**அல்லது**

உடன் காசு விற்பனை ரூபா 30 000 காசேட்டில் சரியாகப் பதியப்பட்ட போதும் விற்பனைக் கணக்கில் செலவில் பதியப்படாமை.

**அல்லது**

உடன் காசு விற்பனை ரூபா 30 000 விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்படாமை.

| | |
|---|---|
| வழுக்கள் 3 /4 க்கு | 02 புள்ளிகள் |
| வழுக்கள் 2 க்கு | 01 புள்ளி |
| வழு 1 க்கு | 1/2 புள்ளி |

ii.

ஆ.

**பொதுநாட்குறிப்பேடு**

| திகதி | நாட்.கை | விபரம் | பே.ப | தொகை வரவு | தொகை செலவு |
|---|---|---|---|---|---|
| | | கொள்வனவு கணக்கு வரவு | | 45000 | |
| | | கடன் கொடுத்தோர் கணக்கு | | | 45000 |
| | | (ரூபா 45000 க்கான கடன் கொள்வனவு ஏடுகளில் பதிவு செய்யப்படாமை திருத்தப்பட்டது) | | | |
| | | மின்சாரக் கட்டணக் கணக்கு வரவு | | 16000 | |
| | | தொங்கல் கணக்கு | | | 16000 |
| | | (மின்சாரக் கட்டணக் கணக்கு ரூபா 8 000 செலவில் பதிந்தமை திருத்தப்பட்டது) | | | |
| | | தளபாடக் கணக்கு வரவு | | 12000 | |
| | | கொள்வனவுக் கணக்கு | | | 12000 |
| | | (துளபாடக் கொள்னவனவு ரூபா 12000 கொள்வனவுக் கணக்கில் பதிந்தது திருத்தப்பட்டது) | | | |
| | | தொங்கல் கணக்கு வரவு | | 30000 | |
| | | விற்பனைக் கணக்கு | | | 30000 |
| | | ( காசு விற்பனை ரூபா 30000 விற்பனைக் கணக்கில் பதியப்படாமை திருத்தப்பட்டது.) | | | |

சரியான பதிவிற்கு 1/2 புள்ளி

விளம்பல் 1/2 புள்ளி

(1 × 2 = 02 புள்ளி)

**அல்லது**

**கொள்வனவுக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| 2/03 | கடன் கொடுத்தோர் கணக்கு | | 45 000 | 4/03 | தளபாடக் கணக்கு | | 12 000 |

**தளபாடக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| 4/03 | கொள்வனவு | | 12 000 | | | | |

**மின்சாரக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | தொங்கல் | | 16 000 | | | | |

**விற்பனைக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5/03 | தொங்கல் | | 30 000 |

**கடன் கொடுத்தோர் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2/03 | கொள்வனவு | | 45 000 |

**தொங்கல் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனை | | 30 000 | | மீதி. வந் | | 14 000 |
| | | | | | மின்சாரம் | | 16 000 |
| | | | 30 000 | | | | 30 000 |

iii.

**நிர்மலன் வணிகத்தின்**
**31.05.2019 இல் முடிவடைந்த மாதத்திற்கான**
**உற்பத்திக் கிரய அட்டவணை**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **நேர் மூலப்பொருள்** | | |
| – பிளாஸ்டிக் போத்தல் கொள்வனவு | 13 000 | |
| **நேர் கூலி** | | |
| – பூச்சாடிகளை தயாரிப்பவருக்கான சம்பளம் | 6 000 | |
| – முதன்மைக் கிரயம் (1/2) | | 19 000 |
| **நேரில் மூலப்பொருள்** | 2 500 | |
| – பூச்சாடிகளுக்கு வர்ணப் பூச்சிடல் செலவு | | |
| **ஏனைய நேரில் செலவு** | 3 000 | |
| – மின்சாரச் செலவு | 5 00 (1/2) | |
| – பூச்சாடி தயாரிக்கும் இயந்திரப் பெறுமானத் தேய்வு | | 6 000 |
| உற்பத்தி மேந்தலைச் செலவு (1/2) | | |
| மொத்த உற்பத்திக் கிரயம் | | 25 000 (1/2) |

(02 புள்ளிகள்)

iv. அ.

**தில்லை வணிகத்தின்**
**2019 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி | |
|---|---|---|---|---|---|
| 1.03.19 | மீதி | - | - | 11 000 | (1/2) |
| 2.03.19 | காசு | - | 20 000 | 31 000 | |
| 4.03.19 | காசோலை 352301 | 10 000 | - | 21 000 | |
| 5.03.19 | காசோலை 758011 | - | 22 000 | 43 000 | |
| 15.03.19 | நேரடி வைப்பு | - | 15 000 | 58 000 | |
| 25.03.19 | காசோலை 352302 | 20 000 | - | 38 000 | |
| 30.03.19 | வங்கிக் கட்டணம் | 3 000 | - | 35 000 | (1/2) |
| | | (1) | (1) | | |

(03 புள்ளிகள்)

ஆ. – நேரடி வைப்பு ரூபா 15 000
– வங்கிக் கட்டணம் ரூபா 3 000 (1 × 1 = 01 புள்ளிகள்)

Q6

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| அ. 01<br>ஆ. 01 | அ. 02<br>ஆ. 02 | 02 | அ. 03<br>ஆ. 01 | 12/12 |

7. (i) (அ) அறவிடமுடியாக் கடன் என்றால் என்ன ?

(ஆ) இலாப நோக்கற்ற நிறுவனங்களில் வருமானக் கூற்று தயாரிக்கப்படுவதன் நோக்கம் யாது ? (02 புள்ளிகள்)

(ii) புதுமை இளைஞர் மன்றத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 100 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 ஆகும். 2019 ஒக்டோபர் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| காகிதாதிகள் கொள்வனவு ........................ | 3 000 |
| பத்திரிகை, சஞ்சிகைகள் கொள்வனவு ...... | 6 000 |
| தபாற் செலவு ........................................... | 500 |
| பெறப்பட்ட நன்கொடைகள் ...................... | 3 000 |

மேலதிக தகவல்கள்:

- அங்கத்தவர்கள் 20 பேர் ஒக்டோபர் மாதத்திற்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்தியிருக்கவில்லை.
- 01.10.2019 இல் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கின் மீதி ரூ. 5 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

புதுமை இளைஞர் மன்றத்தின் 31.10.2019 இல் முடிவுற்ற மாதத்திற்கான பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கைத் தயாரித்தல் (02 புள்ளிகள்)

(iii) 31.12.2018 இல் சங்கீத்தின் சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு:

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| கட்டடம் (கிரயத்தில்) ................................................ | 350 000 | |
| கட்டடப் பெறுமானத்தேய்வு ஏற்பாடு (01.01.2018 இல்) . | | 140 000 |
| சரக்கிருப்பு (01.01.2018 இல்)........................................ | 30 000 | |
| கொள்வனவுகள் ........................................................ | 220 000 | |
| விற்பனைகள் ........................................................... | | 300 000 |
| கடன்பட்டோர் ........................................................... | 40 000 | |
| கடன்கொடுத்தோர் ..................................................... | | 30 000 |
| கொடுத்த கழிவுகள் ................................................... | 2 500 | |
| பெற்ற கழிவுகள் ....................................................... | | 2 000 |
| மின் கட்டணம் ......................................................... | 5 000 | |
| அறிவிடமுடியாக் கடன் ............................................. | 1 500 | |
| 12% வங்கிக் கடன் ................................................... | | 100 000 |
| வங்கிக் கடன் வட்டி ................................................. | 10 000 | |
| காசு மீதி ................................................................ | 35 000 | |
| தொலைபேசிக் கட்டணம் ............................................. | 2 000 | |
| மூலதனம் ................................................................ | | 124 000 |
| | **696 000** | **696 000** |

மேலதிக தகவல்கள்:

- 31.12.2018 இல் இருந்தவாறு சரக்கிருப்பு ரூ. 22 000 ஆகும்.
- கட்டடங்களுக்கு வருடாந்தம் எளிய நேர்கோட்டு முறையில் 20% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.12.2018 இல் அட்டுறு மின்சாரக் கட்டணம் ரூ. 1 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2018 இல் இருந்தவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

i.

அ. ஏதாவதொரு காரணத்தினால் கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஒன்றை நிச்சயமாக அறவிட்டுக் கொள்ள முடியாத நிலையொன்று தோன்றினால் அத்தொகை அறவிடமுடியாக் கடன் எனப்படும். (01 புள்ளி)

ஆ. – இலாப நோக்கற்ற அமைப்புக்கள் குறித்த காலப்பகுதி ஒன்றில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் பெறுபேற்றினைக் கணிப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்படுகின்றது.

– ஏதாவது காலப்பகுதிக்குரிய வருமான மிகையினை அல்லது வருமானக் குறைவினை கணிப்பீடு செய்வதற்காகத் தயாரிக்கப்படும். (01 புள்ளி)

ii.

**புதுமை இளைஞர் மன்றத்தின்**
**31.10.2019 இல் முடிவுற்ற மாதத்திற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு**

| விபரம் | ரூபா | விபரம் | ரூபா |
|---|---|---|---|
| 1.10.19 மீதி. கீழ். கொண்டு. வந் | 5 000 (1/2) | காகிதாதிகள் கொள்வனவு | 3 000 ✷ |
| பெற்ற சந்தா | 4 000 (1/2) | பத்திரிகை, சஞ்சிகை கொள் | 6 000 ✷ |
| நன்கொடை | 3 000 ✷ | தபாற் செலவு | 500 ✷ |
| | | 31.10.19 மீதி. கீ. கொ. செ | (1/2) 2 500 |
| | 12 000 | | 12 000 |
| 1.11.19 மீதி. கீ. கொ. வ | 2 500 | | |

✷ 4 உருப்படிகளுக்கு 1/2 புள்ளி (02 புள்ளிகள்)

iii.

**சங்கீத் சில்லறை வணிகத்தின்** (1/2)

**31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று**

| விபரம் | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| **விற்பனை** | | | 300 000 |
| கழி விற்பனைக்கிரயம் | | | |
| 2018.01.01 இல் சரக்கிருப்பு | | 30,000 | |
| கூட்டு கொள்வனவுகள் | | 220 000 | |
| **விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி** | | 250 000 | |
| கழி 2018.12.31 இல் சரக்கிருப்பு | | (1/2) (22 000) | (228 000) (1/2) |
| மொத்த இலாபம் | | | 72 000 (1/2) |
| கூட்டு பெற்ற கழிவு | | | 2 000 |
| | | | 74 000 |
| **விநியோகச் செலவு** | | | |
| கொடுத்த கழிவு | 2 500 | | |
| அறவிடமுடியாக் கடன் | 1 500 | 4 000 | |
| **நிர்வாகச் செலவுகள்** | | | |
| மின்சாரக் கட்டணம் | 6 000 | (1/2) | |
| தொலைபேசிக் கட்டணம் | 2 000 | | |
| கட்டிடப் பெறுமானத் தேய்வு | 70 000 (1/2) | 78 000 | |
| **நிதிச் செலவு** | | | |
| வங்கிக் கடன் வட்டி | | 12 000 (1/2) | (94 000) |
| தேறிய நட்டம் மூலதனக் கணக்கிற்கு மாற்றியது (1/2) | | | (20 000) |

( 04 புள்ளிகள்)

**சங்கீத் சில்லறை வணிகத்தின்**

**31.12.2018 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** (1/2)

(1/2)

| விபரம் | கிரயம் | தி.பெ.தே | தே. பெறுமதி |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லா சொத்து** | | | |
| கட்டிடம் | 350,000 | 210 000 (1/2) | 140,000 |
| | 350,000 | 210, 000 | 140,000 (1/2) |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு (2018. 12. 31) | | 22, 000 (1/2) | |
| கடன்பட்டோர் | | 40, 000 | |
| காசு மீதி | | 35,000 | 97, 000 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 237, 000 |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | 124,000 | |
| கூட்டு: தேறிய நட்டம் | (1/2) | (20 000) | 104, 000 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | |
| 12% வங்கிக் கடன் | | | 100,000 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | |
| கடன்கொடுத்தோர் | | 30,000 | |
| செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி | | 2,000 (1/2) | |
| அட்டுறு மின்சாரம் | | 1 000 (1/2) | 33 000 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும் | | | 237,000 |

(04 புள்ளிகள்)

| (i) | (ii) | (iii) | | |
|---|---|---|---|---|
| அ. 01<br>ஆ. 01 | 02 | அ. 04<br>ஆ. 04 | | 12/12 |

**சங்கீத் சில்லறை வணிகத்தின்** (1/2)

**31.12.2018 இல்முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா | விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| 2018.01.01 இல் சரக்கிருப்பு | | 30,000 | விற்பனை | | 300,000 |
| கொள்வனவு | | 220 000 | | | |
| **விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி** | | 250 000 | | | |
| கழி 18.12.31 சரக்கிருப்பு | | (22,000) (1/2) | | | |
| விற்பனைக்கிரயம் | | 228 000 (1/2) | | | |
| மொத்த இலாபம் | | 72 000 (1/2) | | | |
| | | 300,000 | | | 300,000 |
| | | | மொத்த இலாபம் | | 72 000 |
| **விநியோகச் செலவு** | | | பெற்ற கழிவு | | 2,000 |
| கொடுத்த கழிவு | 2 500 | | | | |
| அறவிடமுடியாக்கடன் | 1 500 | | தேறிய நட்டம் மூலதனக் கணக்கிற்கு மாற்றியது (1/2) | | 20 000 |
| | | 4 000 | | | |
| நிர்வாகச் செலவு | | | | | |
| மின்சாரக் கட்டணம் | 6,000 (1/2) | | | | |
| தொலைபேசிக் கட்டணம் | 2 000 | | | | |
| கட்டடப் பெறுமானத் தே. | 70 000 (1/2) | 78 000 | | | |
| நிதிச்செலவு | | | | | |
| வங்கிக் கடன் வட்டி | | 12 000 (1/2) | | | |
| | | 94 000 | | | 94, 000 |

(04 புள்ளிகள்)

**சங்கீத் சில்லறை வணிகத்தின்** (1/2)

**31.12.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று** (1/2)

| விபரம் | ரூபா | ரூபா | விபரம் | கொ.வி | தி.பெ | இறுதி பெறு |
|---|---|---|---|---|---|---|
| **உரிமையாண்மை** | | | **நடை. அல். சொத்து** | | | |
| மூலதனம் | 124,000 | | கட்டிடம் | 350,000 | 210 000 (1/2) | 140 000 |
| கூட்டு: தேறிய இலாபம் | (20 000) (1/2) | 104,000 | | | | |
| | | | | 350,000 | 210,000 | 140,000 (1/2) |
| **நடை. மு. அல்லா பொறு** | | | | | | |
| 12% வங்கிக்கடன் | | 100,000 | **நடைமுறை சொத்து** | | | |
| | | | சரக்கிருப்பு | | 22,000 (1/2) | |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | கடன்பட்டோர் | | 40, 000 | |
| கடன்கொடுத்தோர் | 30,000 | | காசு மீதி | | 35 000 | 97 000 |
| அட்டுறு மின் கட்டணம் | 1 000 (1/2) | | | | | |
| அட்டுறு வங்கிக் கடன் வட்டி | 2 000 (1/2) | 33 000 | | | | |
| | | 237 000 | | | | 237,000 |

(04 புள்ளிகள்)